# எம்பிலிபிட்டிய நகர சபை
# இரத்தினபுரி மாவட்டம்

## 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்கள் 2012 மார்ச் 06 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜனவரி 27 ஆந் திகதியன்று சபையின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிசார் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் ஆகஸ்ட் மாதத்தில் எம்பிலிபிட்டிய மக்கள் வங்கிக் கிளையில் ஆரம்பிக்கப்பட்ட 045-1-001-5-00410-38 இலக்க நகர்ப்புற அபிவிருத்தி அதிகார சபைக் கணக்கில் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,052,331 மீதியிருந்த போதும் அது கணக்கில் வெளிக்கொணரப்படவில்லை.

(ஆ) சபையின் தகவல்களுக்கமைய, மீளாய்வாண்டிற்கான நீதிமன்றத் தண்டப்ப வருவாய் ரூபா 3,237,400 ஆகும். ஆயினும், ரூபா 600,000 மாத்திரமே பேரேட்டுக் கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டமையால் மீளாய்வாண்டிற்கான வருவாய் ரூபா 2,637,400 குறைத்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 4,078,550 ஆகும். சபையின் அறிக்கைப் பிரகாரம் கொடுக்க வேண்டிய தொகை ரூபா 4,668,570 ஆகும். இதனால் அத்தினத்தில் உள்ளவாறு கடன்பட்டோர் தொகையில் ரூபா 590,020 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டமையால் ரூபா 41,610,009 கூட்டுத்தொகையுடைய கொடுக்கல் வாங்கல்களைக் கணக்காய்வில் திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்தமுடியவில்லை.

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமாப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 4,165,585 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 11,192,806 ஆகும்.

### 2.2 வருவாய் நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை என்பன

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டுச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருவாய், உள்ளபடியான வருவாய், வருவாய் நிலுவை தொடர்பான தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| | வருவாய் தோற்றுவாய் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| (i) | தீர்வையும் வரியும் | 5,529 | 4,474 | 1,055 |
| (ii) | குத்தகை வாடகை | 7,450 | 5,163 | 2,287 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 2,961 | 1,635 | 1,326 |
| (iv) | பிற வருவாய் | 3,822 | 2,701 | 1,121 |

### 2.2.2 பிற வருவாய்

பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 முதல் 2010 வரையான காலப்பகுதிக்குரிய பஸ் தரிப்பிடக் கட்டண நிலுவையாகிய ரூபா 1,259,334 அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2011 ஆம் ஆண்டின் மதிப்பிடப்பட்ட பிரசார அறிவித்தல் மற்றும் விளம்பரப் பலகைக் கட்டண வருவாய் ரூபா 1,000,000 ஆகும். 2012 ஆம் ஆண்டினது உள்ளபடியான பெறுவனவு ரூபா 491,402 ஆகும் இதற்கமைய, நிலுவைக் கட்டத்தை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(இ) சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள இரு சினிமாக் கொட்டகைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய வினோத வரியை முறையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணமும் முத்திரைக் கட்டணமும்

மாநகர சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய தொகை கீழே காணப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்றத் தண்டப்பணம் | 3,237,400 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 4,668,570 |

**2.3 பயன்படுத்தப்படாத வளங்கள்**

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

கைவிரல் அடையாளத்தின் மூலம் தேசத்தைக் குறிப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் ரூபா 130,066 செலவழித்துக் கொள்வனவு செய்த இயந்திரத்தில் உள்ள செயற்பாட்டுக் கோளாரினால் அது பயன்படுத்தப்படாதிருந்தது.

**2.4 ஒப்பந்த நிர்வாகம்**

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

**2.4.1 கிரலவெல் கட்டுவ பழைய வீதியைத் தாரிட்டுச் செப்பனிடும் வேலை**

இவ் வேலைக்கென 2012 ஜூலை 05 ஆந் திகதியன்று விவசாய அமைப்பொன்றுடன் ரூபா 964,924 க்கான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. நிர்மாண வேலைகள் 2012 ஆகஸ்ட் 29 அல்லது முடிவுற்றன. செய்த வேலையின் பெறுமதி ரூபா 964,804 ஆகும். 2013 ஆகஸ்ட் 06 அன்று மேற்கொள்ளப்பட்ட நேரடிப் பரிசோதனையில் பின்வரும் விடயங்கள் புலனாகின.

(i) தொழில்நுட்ப உத்தியோகத்தரின் 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதிய இறதிக் கொடுப்பனவு அறிக்கைப்படி 318 மீட்டர் செப்பனிடப்பட்டமைக்கான கொடுப்பனவுக்குக் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. எனினும், நேரடிப் பரிசோதனையில் முடிவுறாத 18 மீட்டருக்கு 54,611 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ii) செலவின மதிப்பீட்டு விடயம் 10 க்கு ரூபா 68,006 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினம், அவ்விடயம் மதிப்பிடப்பட்டவாறு பூர்த்தி செய்யப்படவில்லை.

**2.4.2 மஹாவலி விளையாட்டு மைதான நுழை பாதையில் தாரிட்டுச் செப்பனிடல்**

இவ்வேலைக்கென கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்றுடன் 2012 செப்தெம்பர் 28 அன்று ரூபா 279,260 க்கான உடன்படிக்கை செய்யப்படடிருநதது 2013 ஜனவரி மாதத்தில் நடைபெற்ற வேலைக்கு ரூபா 265,425 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

மதிப்பீட்டினது 01 ஆம் 02 ஆம் இலக்க விடயங்களின் பிரகாரம் 100 மி.மீ கற்கான வழங்கி அவற்றைப் பரப்புவதற்கு 5.27 கன மீட்டருக்கு ரூபா 14,470 கொடுப்பனவு செய்யப்பட்ட போதும், அவ் வேலை நடைபெறவில்லை. என 2013 ஆகஸ்ட் 06 ஆந் திகதிய நேரடிப் பரிசோதனையில் புலனாகியது.

## 2.5 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

**பின்வருவன அவதானிக்கப்பட்டன.**

(அ) முற்பணமாக ரூபா 949,128 கூட்டுத்தொகை வழங்கப்பட்டு 1 ஆண்டும் 6 மாதங்களும் முற்பணமாக 5 ஆண்டுகளும் 10 மாதங்களும் வரையிலான காலங் கழித்திருந்த போதும், கணக்காய்வுத் தினமான 2013 ஜுலை 30 அன்றும் அதனைத் தீர்த்து வைக்க நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது காசேட்டின் பிரகாரமான செப்தெம்பர் மாத அதிகுறைந்த மீதி ரூபா 1,643,033 ஆகும். அதிகூடிய மீதி ஜனவரியில் ரூபா 5,059,233 ஆகவும் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,454,853 ஆகவுமிருந்தால் கூடிய தொகையை நிலையான வைப்பிலிட்டு சபையின் நிதியும் வட்டியைப் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2.6 தின்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவச் செயற்திட்டம்

உற்பத்தி செய்யப்பட்ட 25 கி.கி கொம்போஸ்ட் உரத்தையுடைய 25 பைகளும் 10 கி.கி உடைய கொம்போஸ்ட் உரக் கையிருப்பு செயற்திட்ட வளாகத்தில் உள்ள களஞ்சிய அறையில் இருந்தன. ஏறக்குறைய 915 கன அடி கொம்போர்ஸ்ட் கையிருப்பு செயற்திட்ட வளாகத்தில் களஞ்சிய அறையில் இருந்தன. அதே சமயம் கொம்போஸ்ட் உர விற்பனையில் வருவாய் எதுவும் பரீசீலனைத் திகதிவரை சபை நிதியத்திற்கு கிடைக்கப் பெறவுமில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கீழே குறிப்பிடப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் சபையின் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(எ) திண்மக் கழிவுப் பொருள் முறைமைகள்